**Starting time 01.18 P.M.**

# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR

## O.S. No. 351/2002

Deposition of **D.W.1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. K. Janaki, Gr. III Bench Clerk of this court, on 11.07.2023 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : சுந்தரி | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி: அசல் வழக்கு எண் 107/2003-ல் 2-ம் வாதி இறந்து விட்டார் என்றாலும், அவருக்கு வாரிசுகள் இருக்கிறார்கள் என்றாலும், ஆமாம். 2-ம் வாதியின் வாரிசுகளை அசல் வழக்கு எண் 107/2003-ல் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால், ஆமாம். அதனால், மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால், சரியல்ல, தாவா சொத்தை நான் கிரயம் பெற்றுவிட்டதால் அவர்களை சேர்க்கவில்லை. அசல் வழக்கு எண் 107/2003-ல் நான் விளம்புகை பரிகாரம் கேட்டுள்ளதால் 2-ம் வாதியின் வாரிசுகள் அவசியமான தரப்பினர்கள் என்பதால், அவர்களை சேர்க்காததால் அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால், சரியல்ல. அசல் வழக்கு எண் 107/2003-ல் 1-ம் பிரதிவாதியிடம் இருந்து நான் சொத்தைக் கிரயம் வாங்கியுள்ளேன் என்றால், ஆமாம்.

2. 1 மற்றும் 2 பிரதிவாதிகளுக்கிடையே பாகப் பிரிவினை நடந்து அதில் 1-ம் பிரதிவாதி ஆறுமுகத்தின் பாகத்தைதான் நான் வாங்கிக் கொண்டேன் என்றால், ஆமாம். ஆறுமுகத்தின் பாகப் பிரிவினைப் பத்திரம்தான் எனக்கு மூலப்பத்திரம் என்றால், ஆமாம். வா.சா.ஆ.2-ல் பொதுஷாரா என்று குறிப்பிட்டுள்ளதில் புல எண் 182/1B-யில் 1-ம் பிரதிவாதிக்கு வண்டிப்பாதை உரிமை கொடுக்கப்பட்டுள்ளது என்றாலும், அந்த வண்டிப்பாதை உரிமையைத்தான் நான் இவ்வழக்கில் பரிகாரமாக கேட்டுள்ளேன் என்றால், சரியல்ல, நான் முத்தம்மாளிடம் இருந்து கிரயம் பெற்ற சொத்திற்கான வண்டிப்பாதை உரிமையைத்தான் கேட்டுள்ளேன்.

3. 1-ம் பிரதிவாதியிடம் இருந்து கிரயம் பெற்ற சொத்திற்கு புல எண் 72/17-ல் எனக்கு

வண்டிப்பாதை உரிமை தேவையில்லையா என்றால், தேவையில்லை, முத்தமாளிடமிருந்து கிரயம் பெற்றதற்குத்தான் வண்டிப்பாதை உரிமை வேண்டும். 1-ம் பிரதிவாதி ஆறுமுகத்திடம் இருந்து நான் கிரயம் பெற்ற இடத்திற்கு வடபுறத்தில்தான் புல எண் 72/17 அமைந்துள்ளது என்றால், இல்லை. நான் கிரயம் பெற்ற நிலத்திற்கு வடபுறத்தில்தன் புல எண் 72/17 உள்ளது என்றாலும், நான் தற்போது வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றாலும், சரியல்ல, நான் முத்தம்மாளிடம் இருந்து கிரயம் பெற்ற நிலத்திற்கு தெற்கில்தான் மேற்படி சர்வே எண் உள்ள நிலம் உள்ளது. உண்மையிலேயே நான் கூறுவது போல புல எண் 72/17-ல் தடம் இருந்திருந்தால், ஆறுமுகத்தின் பாகப்பிரிவினை பத்திரத்திலும், அவர் எனக்கு எழுதிக் கொடுத்த கிரயப் பத்திரத்திலும் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால், சரியல்ல, பஞ்சாயத்து பேசப்பட்டு தீர்மானம் போட்டு தட உரிமை கொடுத்தார்கள். அவ்வாறான தீர்மானம் குறித்தான ஆவணம் எதையும் நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால், வேண்டுமானால் தாக்கல் செய்கிறேன். உண்மையிலேயே தீர்மானம் எதுவும் போடப்படாததால்தான் நான் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல.

4. முத்தம்மாளின் நிலம் ஓடைக்கு வடக்கில் அமைந்துள்ளது என்றால், ஆமாம். அந்த ஓடைபுறம்போக்கு புல எண் 72-ல் அமைந்துள்ளது என்றால், ஆமாம். அந்த ஓடை எவ்வளவு அகலத்தில் உள்ளது என்றால், சுமார் 7, 8 அடி அகலம் இருக்கும். சுமார் 15-லிருந்து 20 அடி அகலத்தில் ஓடை பூமியில் போகிறது என்றால், முன்பு போய்க் கொண்டிருந்தது, இப்போது பக்கத்தில் இருப்பவர்கள் ஓடையை ஆக்கிரமிப்பு செய்து கொண்டர்கள். அந்த ஓடை 50 அல்லது 60 அடி ஆழத்தில் இருக்கும் என்றால், இல்லை, ஒரு ஆள் இறங்கும் அளவிற்குத்தான் இருக்கும். முத்தம்மாளிடம் இருந்து நான் கிரயம் பெற்ற பத்திரத்தில் எந்தெந்த புல எண்கள் வழியாக வந்து புல எண் 72/17-க்கு தடப்பாத்தியம் உள்ளதாக குறிப்பிட்டு எழுதி வாங்கவில்லை என்றால் அது அரசாங்கத்திற்கு சொந்தமான பாதை, எழுதி வாங்கினேனா என்று தெரியவில்லை. முத்தம்மாளிடமிருந்து வாங்கிய நிலத்தில் இருந்து புல எண் 72/17-க்கு வர வேண்டும் என்றால், ஓடையைத் தாண்டித்தான் வர வேண்டும் என்றால், ஆமாம். ஓடையில் முள், செடி கொடிகள் வளர்ந்துள்ளது என்றால், ஆமாம். எக்காலத்திலும் முத்தம்மாளின் நிலத்திலிருந்து ஓடையைத் தாண்டி புல எண் 72/17-க்கு பாதை சென்றது இல்லை என்றால், சரியல்ல, பாதை இல்லாமல் அரசாங்கம் பட்டா கொடுக்க முடியாது.

5. முத்தம்மாளுக்கோ, எனக்கோ புல எண் 72/17-ன் வழியாக பாதை இருப்பதாக அரசாங்கம் உத்தரவு போட்டுக்கொடுத்துள்ளதா என்றால், அது நீண்டகாலமாக இருக்கும் பழைய

பாதை, புதிய பாதையாக இருந்தால்தான் உத்தரவு கொடுப்பார்கள். நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. புல வரைபடத்தில் முத்தம்மாள் நிலத்தில் இருந்து புல எண் 72/17-க்கு தடம் வருவதாக காண்பிக்கப்பட்டுள்ளதா என்றால், இருக்கிறது. அந்த புல வரைபடத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், தெரியாது. அவ்வாறான பாதை இருப்பதாக புல வரைபடத்தில் காட்டப்படவில்லை என்றால், சரியல்ல. அசல் வழக்கு எண் 107/2003-ன் முதல் வாதியின் நிலத்திலிருந்து எனது நிலம் வழியாக பாதை செல்வது சம்பந்தமாக ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால், எங்களுடைய நிலத்தை தாண்டித்தான் அவருடைய நிலத்திற்கு செல்ல வேண்டும்.

6. எனது நிலத்தில் இருந்து முதல் வாதியின் நிலத்திற்கு பாதை உள்ளது என்றால், சரிதான். அவ்வாறான பாதை எதுவும் இல்லை என்றால், சரியல்ல. புல எண் 72/17-ல் உள்ளதாக சொல்லப்படும் பாதையை ரத்து செய்து புல எண் 72-ஆக அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது என்றால், பாதை ஏற்கனவே இருந்தது. என்றுமே பாதை இல்லாததால்தான் பாதை என்று குறிப்பிட்டு உட்பிரிவு செய்யப்பட்ட புல எண் 72/17-ஐ அரசாங்கம் ரத்து செய்தது என்றால், சரியல்ல. அவ்வாறு பாதை இல்லையென உட்பிரிவு ரத்து செய்ததை எதிர்த்து நான் ஏதேனும் மேல்முறையீடு செய்துள்ளீர்களா என்றால், இல்லை. ரத்து செய்ததை எதிர்த்து மேல்முறையீடு செய்யாததால் நான் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல.

7. அசல் வழக்கு எண் 351/2002-ல் உள்ள தாவா சொத்துக்கள் உட்பிரிவுக்கு முன்பும், பின்பும் 2-ம் வாதியின் அனுபவத்தில்தான் உள்ளது என்றால், சரியல்ல, எல்லாரும்தான் பாதையில் போய்க் கொண்டிருந்தார்கள். மேற்படி வழக்கின் தாவா சொத்தை அந்த வழக்கின் வாதிகள் நிலமாகத்தான் அனுபவித்து வருகிறார்கள் என்றால், சரியல்ல. தாவா சொத்தை இரண்டு முறை நீதிமன்ற ஆணையர் வந்து பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார் என்றால், இல்லை. அசல் வழக்கு எண் 107/2003-ல் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கை மற்றும் வரைபடத்தில் புல எண் 72/17-ல் பாதை எதுவும் இல்லை எனவும், மரங்கள்தான் உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. அசல் வழக்கு எண் 208/2006-ல் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் வரைபடத்தில் புல எண் 72/17-ல் பாதை எதுவும் இல்லை எனவும், மரங்கள்தான் உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரியல்ல, தடம் போகிறது. மேற்படி சங்கதிகளை மறைத்து நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

8. முத்தம்மாளிடமும், ஆறுமுகத்திடமும் நான் கிரயம் பெற்ற சொத்துக்களுக்கு

மாற்றுப்பாதை உள்ளது என்றாலும், அதை மறைத்து புல எண் 72/17-ஐ தவிர வேறுபாதை இல்லை என்று நான் கூறுவது தவறு என்றால், சரியல்ல. புல எண் 72/17 நானோ, ஆறுமுகமோ, முத்தம்மாளோ, பொதுமக்களோ என்றுமே பாதையில் சென்றதில்லை என்றால், சரியல்ல, போய்க்கொண்டுதான் இருக்கிறார்கள். புல எண் 72 ஆனது நீர்வழி புறம்போக்காக அரசால் வகைப்படுத்தப்பட்டுள்ளதால் பாதை என்னால் கோர இயலாது என்றால், சரியல்ல. எந்த தேதியிலிருந்து மணி வகையறா பாதையின் அகலத்தை குறைத்தார்கள் என்றால், அதை பற்றி எனக்கு தெரியாது. உண்மையிலேயே தடம் இல்லை என்பதால், வாதிகள் பாதையை அழிக்கவும் இல்லை, குறைக்கவும் இல்லை என்றால், சரியல்ல. எனக்கு பாதை உரிமையே இல்லை என்பதாலும், அந்த பாதையே இல்லை என்பதாலும், நான் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண் 107/2003 தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும், சரியல்ல. அசல் வழக்கு எண் 351/2002-ல் புல எண் 72/14, 15, 17 ஆனது அந்த வழக்கின் வாதிகளின் அனுபவத்தில் இருந்து வருவதால் அவர்களுக்கு நீண்ட அனுபோக பாத்தியம் ஏற்பட்டுள்ளது என்றால், சரியல்ல. அசல் வழக்கு எண் 351/2002 வாதிகளின் முன்னோர்களும் அந்த தாவா சொத்தை அனுபவித்து வந்தார்கள் என்றால், சரியல்ல. எனவே, அசல் வழக்கு எண் 351/2002 தாவா அனுமதிக்கப்பட வேண்டும் என்றால், சரியல்ல.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

பிரதிவாதிகள் தரப்பில் மறு விசாணை இல்லை.

Ending Time : 01.58 P.M.

**(**ஒப்பம்/- என்.திலகேஸ்வரி**)**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),
ஆத்தூர்.